உ
சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு ஹூ ஆவணிமீ ௩ உ (1943 ஆகஸ்ட்மீ 19 வியாழக்கிழமை) [இல. ௩அ

## அதிக நம்பிக்கை வேண்டாம்

### அமெரிக்கருக்கு எச்சரிக்கை

வாஷிங்டன் ஆக 16—

அமெரிக்க யுத்த தளவாட சேகரிப்பு இலாகாவின் டைரக்டர் திரு. ஜேம்ஸ் பைரன் இன்று ரேடியோவில் பேசுகையில் கூறியதாவது:-

ஜெர்மனி மீதும் ஜப்பான் மீதும் நாம் நடத்தும்போரில் கடைசியாக வெற்றியடைவோமென்று நம்புவதற்குப் போதிய காரணமிருக்கிறது. ஆனால், யுத்தத்தின் முக்கியமான போர்கள் இனிமேல்தான் நடைபெற இருக்கின்றனவென்று கூற ஜனாதிபதி எனக்கு அநுமதியளித்திருக்கிறார்.

யுத்தத்திற்குத் தயாராவதில் நாம் வெற்றிபெற்றுவிட்டால் யுத்தப்போக்கு நேசநாடுகளுக்குச்சாதகமாக மாறிவிட்டது. போரிட இத்தாலியரிடம் இனி உறுதியில்லையென்று அசட்டு நம்பிக்கை கொள்ளக்கூடாதென்று அமெரிக்க மக்களை எச்சரிக்கை செய்கிறேன். சமீபத்தில் அச்சுநாடுகள் சரணடைந்துவிடுமென்று நம்பிக்கை கொள்ள இடமில்லை.

சிஸிலியிலும் ஆபிரிக்காவிலும் நேசதேசப்படைகளுக்குக் கிடைத்தவெற்றிகளைப்பற்றிப் பேசுகையில் திரு. பைரன் கூறியதாவது:- ஐரோப்பாவிலுள்ள மொத்த அச்சுப்படைகளில 100க்கு 7 வீதமான படைகளே இவ்விடங்களில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. ருஷ்ய சத்துருவின் படைகளில் நூற்றுக்கு 40 வீதமான படைகளை எதிர்த்துப் போராடுகிறது.

## மரக்கிளை விழுந்து மரணம்

ராஜகிரிப் பகுதியிலுள்ள கொத்துவகோட்டையைச் சேர்ந்த டி. ஜே. பெரேரா ஒரு மரத்தின் கிளையொன்றை வெட்டும்போது அக்கிளை அவர்மீது விழ நேர்ந்தது. பெரேரோவுக்கு மண்டையிற் காயமேற்படவே அவர் மரணமடைந்தார்.

## மன்னருக்குஜனாதிபதியின் செய்தி

ரூமேனியாவிலுள்ள பிளோஸ்டி எண்ணெய்க் கிணறுகளை அமெரிக்க விமானங்கள் தாக்கி எதிர்பார்த்ததைவிட அதிகமான சேதத்தை ஏற்படுத்திவிட்டனவென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மன்னர்பிரானுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். பாராட்டுத் தெரிவித்து மன்னர் அனுப்பிய செய்திக்குப் பதிலாகவே இந்தச்செய்தி அனுப்பப் பட்டது.

## 50 புசல் நெல் மாயமாய் மறைந்தது

பொல்காவிலை

குளிப்பிட்டியைச் சேர்ந்த திரு. ஏ. பெரேரா என்பவருக்குச் சொந்தமான நெற் களஞ்சியத்திலிருந்து 50 புசலுக்கு மேற்பட்டநெல் காணாமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# சிஸிலியைப் பகைவர் கைவிட்டனர்

## அச்சுத் துருப்புகள் தீவைவிட்டு வெளியேறியதாக ஜெர்மனியரின் கூற்று

லண்டன் ஆக 17—

அமெரிக்கத் துருப்புகள் இன்று காலை மெஸினாவுக்குள் நுழைந்தன. "மெஸினா இன்றிரவோ அல்லது நாளையோ வீழ்ச்சியடைந்துவிடும்" என்று ஜெனரல் ஈசன் ஹோவர் நேற்றிரவு கூறியதாகத் தெரிகிறது.

சிஸிலியை அச்சுத் துருப்புகள் கடைசியாக இன்று காலை காலி செய்தனவென்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

வட ஆபிரிக்காவிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:- சிஸிலி படையெடுப்பு அநேகமாக முடிந்துவிட்டது. அமெரிக்க மூன்றாவது படையைச் சேர்ந்த துருப்புகள் மெஸினாவின் சுற்றுப்புறங்களை நேற்றிரவு அடைந்தன. இப்பொழுது நகருக்குள் செல்லக் கடுமையாகப் போராடிவருகின்றன. அச்சுப்படைகள் இனிமேல் தப்பியோடாமற் செய்யும்பொருட்டு அத்துருப்புகள் மெஸினா துறைமுகத்தை அடையப் பாடுபடுகின்றன. மெஸினாவின் வீழ்ச்சியுடன் சிஸிலி முழுவதும் நம்வசமாகிவிடும். வடகடற்கரைப் பாதையோரமாக முன்னேறும் அமெரிக்கர் நேற்று மூன்று மணிக்கு மெஸினாவின் வெளிப்புறப் பாதுகாப்புகள்மீது பீரங்கிப் பிரயோகம் செய்யவாரம்பித்தனர்.

பிரிட்டிஷ் எட்டாவதுசேனை சத்துரு நடத்திய ஒரே எதிர்த்தாக்குதலை முறியடித்துக்கொண்டு வடக்கே முன்னேறுகிறது. எட்டாவது சேனையின் துருப்புகள் மெஸீனாவுக்குத் தெற்கே எட்டுமைல் தூரத்தில் இறங்கியிருக்கின்றன. ஜலசந்தியின வழியாகத் துருப்புகளை ஏற்றிச்செல்லும் அச்சுப்படைகளின் போக்குவரத்து மிகவும் குறைந்துவிட்டது. விமான வீழ்த்திப்பீரங்கி எதிர்ப்புச் சிஸிலியில் நேற்றுப்பகலிலிருந்து குறைந்துவிட்டது. ஆனால் இத்தாலியின் கடற்கரையில் அங்கட வடிக்கை அதிகரித்திருக்கிறது.

## பிரியான்ஸ்க் யுத்தம் மும்முரமாக நடக்கிறது

மொஸ்கோ ஆக 16—

ராய்ட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பதாவது:—

ஹிட்லரின் மத்திய தெற்குச் சேனைகளுக்கு இடையேயுள்ள பிரியான்ஸ்க் என்னும் முக்கிய தளத்திற்கான யுத்தம் இப்பொழுது மும்முரமாக நடைபெறுகிறது. கராசேவைக் கைப்பற்றுவதற்கு உபயோகிக்கப்பட்ட சுற்றிவளையும யுத்தோபாயம் பிரியான்ஸ்கிலும் கையாளப்படுகிறது.

ருஷ்ய சேனையின் வடக்குப் பாரிசப்படைகள் தென்மேற்குத் திசையில் முன்னேறி பிரியான்ஸ்கிலிருந்து 40 மைல் தூரத்திலிருக்கும் ஸிக்கீவோ ஸ்டேஷனை அடைந்திருக்கின்றன, தென்பாரிசம் படைகள் முக்கிய ரயில்வே ஜங்ஷனை நோக்கி மேற்கே முன்னேறுகின்றன. அவைகள் பிரியான்ஸ்க்-கார்க்கோவ் ரயில்பாதையிலிருந்து 20 மைலுக்குக் குறைவான தூரத்திலிருக்கின்றன.

ருஷ்யர் வாஸ்டோ விச்சிலயக் கைப்பற்றியதினால் காராசேவுக்கு வடக்கேயுள்ள அடர்ந்த காட்டுப் பிரதேசத்தினூடாகச் செல்லும் பாதைகளில் ஆதிக்கம்பெற்றுப் பிரியான்ஸ்கிற்குப் பாய்ந்து செல்கின்றனர்.

# நெல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது

## வயற் சொந்தக்காரருக்குக் கொடுக்கும் படியில் மாற்றம்

இன்று தொடக்கம் நெல்லின் விலையை 4 ரூபாவிலிருந்து 6 ரூபாவாக விவசாயப்பகுதி நிர்வாகசபை உயர்த்தியிருக்கிறது. அதனோடு தாம் பயிரிடுவோ ரல்லராயினும்; வயல்களின் சொந்தக்காரராயுள்ளோர்க்கு வாரமொன்றுக்கு 8 படி அரிசியும், ஏனைய ஆண், பெண் ஆகியோருக்கு முறையே வாரமொன்றுக்கு 6 படியும், 4 படியும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அந்நிர்வாகசபை தீர்மானித்திருக்கிறது. 3 வயசுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் படியாக எதுவுங் கொடுக்கப்படமாட்டாது.

இப்போது சொந்தக்காரருக்கு வாரமொன்றுக்கு 8 படியும் குழந்தைகள் உட்பட அவரில் தங்கியிருக்கும் ஒவ்வொருவருக்கும் வாரமொன்றுக்குத் தனித்தனி 8 படியுமாகக் கொடுக்கப் பெற்று வந்தது.

கமஞ் செய்வோர்க்குக் கொடுக்கப்படும படிகளில் எதுவும் மாற்றம் இல்லை.

வயற் சொந்தக்காரராயுள்ளோர், அவர்க்குக் கண்டு மிஞ்சியதை அரசாங்கம் வாங்குவதைத் தடுப்பதற்காகத் தத்தம் வயல்களில் விளைந்ததைக் குறைத்துச் சொல்லுகிறார்களென்றும், அங்ஙனம குறைத்துக் கணக்குக் காட்டுவதைத் தடுப்பதற்குரிய வழிவகைகள் கையாளப்படுகின்றனவென்றும் சிவில் பாதுகாப்புக் கொம்மிஷனராகிய மிஸ்டர். ஓ. ஈ. குணதிலகா ஒருபத்திரிகை நிருபரிடம கூறியதாகத் தெரிகிறது.

## 'மன்னர் ஆட்சி ஒழிய வேண்டும்'

### இத்தாலிய அபேதவாதிகள் கொள்கை

சியாஸோ ஆக 16—

இத்தாலிய அபேதவாதிகள் வெளியிட்டிருக்கும் வேலைத் திட்டத்தில் இத்தாலிய மன்னர் விக்டர் எமானுவேல் முடிதுறந்து விட வேண்டுமென்ற கோரிக்கையும் அடங்கியிருக்கிறது. சுவிஸ் பத்திரிகையான 'லிப்ரா ஸ்டாம்பர்'வில் வெளியாகியிருக்கும் அவ் வேலைத் திட்டத்தில் இத்தாலிய அபேதவாதிகள் முதலில் படோகிளியோ அரசாங்க மிதவாதிகளின் ஆதரவுடன் நடைபெறுவதைக் கண்டித்து விட்டுப் பின்வரும் நான்கு கோரிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர்.

1 யுத்தம் உடனே நிறுத்தப்பட வேண்டும். 2 அரசியற் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். 3 யுத்தத்திற்கும் பாஸிஸ்ட் கொள்கைக்கும் காரணமாகவிருக்கும் மன்னர் ஆட்சி ஒழிய வேண்டும். 4 பத்திரிகைகளுக்கும் அரசியல் ஸ்தாபனங்களுக்கும் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

ஜனநாயக நாடுகளைத் தங்களுடைய சத்துருக்களாக மதிக்காமல் சிநேகிதர்களாகவே இத்தாலிய மக்கள் மதிக்கிறார்களென்று அச்செய்தி கடைசியாகக் கூறுகிறது.

## கிறிஸ்மஸுக்கு முன் போர் முடியுமா?

குவிபெக் ஆக 16—

இன்று உத்தியோக முறையில் இங்கு வெளியிடப்பட்ட அறிக்கையொன்று கூறுவதாவது:-

வரும் கிறிஸ்மஸுக்கு முன்னதாகப் போர் முடிந்துவிடுமென்று தான் ஒருபோதும் கூறியதில்லையென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி அறிவிக்கிறார். தமது மறுப்பு சாத்தியப்பட்டவரை அதிகமாக விளம்பரப்படுத்த வேண்டுமென்று அவர் கருதுகிறார்.

## அந்தமான் தீவுகள்மீது குண்டுவீச்சு

புதுடில்லி ஆக 16—

சீனா, பர்மா, இந்தியா ஆகிய இடங்களிலுள்ள அமெரிக்கப்படைகளின் தலைமைக் காரியாலயம் பின்வருமாறு கூறுகிறது:—

அந்தமான் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த சதாம் தீவிலுள்ள சத்துரு ஸ்தாபனங்களை அமெரிக்க கனரக வெடிகுண்டு விமானங்கள் நேற்றுத் தாக்கின. குதங்கள்மீதும் இதர கட்டிடங்கள்மீதும் குண்டுகள் நேரடியாக விழுந்தன. பெருத்த சேதம் விளைவிக்கப்பட்டது. பெருவாரியான நெருப்பும் பற்றி எரிந்தது. விமான எதிர்ப்புப் பீரங்கித் தளங்கள் நாசமாக்கப்பட்டன. அக்கினிச் சுவாலையிலிருந்து கிளம்பிய புகை 50 மைல் தூரத்துக்குத் தென்பட்டது. நமது விமானங்களும் விமானிகளும் சேமமாகத் திரும்பி வந்து சேர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஆவணி௴ ௩௨ வியாழக்கிழமை

## இலங்கையின் இயற்கை வளன்

நாங்கள் வசிக்கும் இந்த இலங்கைத்தீவு பலவகையான இயற்கை வளனோடு கூடியதென்ற இரகசியத்தை இலங்கைச் சர்வகலாசாலைப் போராசிரியர்களுளொருவராகிய திரு. A. கந்தையா அவர்கள் கொழும்பிலுள்ள தினசரிகளுளொன்ருகிய "அப்ஸேவர்" என்னும் பத்திரிகையின் சென்ற ஞாயிற்றுக்கிழமை (15-8-43) வெளியீட்டில் விபரமாக எடுத்துக் காட்டியுள்ளார். அந்த வியாசம் எவராலும் படித்து உணர்ந்து பின்பற்றத்தக்கதாகும். எங்கள் இலங்கையிலே நிலவளம், நீர்வளம் கால மழை மாறிமாறி நிகழும் சுவாத்தியம் முதலிய நன்மைகளெல்லாம் உண்டென்றும், ஆனமையினால் இந்நாட்டிலே மனித வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் காலந்தோறும் ஆக்கிக்கொள்ளுதல் அமையுமென்றும் இங்கே பெறக்கூடிய பிரதான பொருள்கள் எவையென்றும் ஆக்ககூடிய கைத்தொழிற் பொருள்கள் எவையென்றும் மிகவும் விரிவாக மேற்படி பேராசிரியர் தக்க ஆராய்ச்சியுடன் வெளியிட்டுள்ளார். இவைமாத்திரமல்லாமல் இப்பொருள் பண்டங்களை ஆக்குதற்கான வழிகளையும் முறைகளையும் இயன்றவரையில் இவ்வாசிரியர் நுட்பமாகத் தெரிவித்துள்ளார்.

திரு. கந்தையா அவர்களைப் போல நுட்பமாகவும் விரிவாகவும் இவ்விஷயமாக முன்னர் எவருங் கூறிலரேனும், முன்னர்ப் பலர் தம் அறிவிற்கும் அநுபவத்திற்கும் எட்டியபடி இப்படியான வியாசங்களையிட்டுப் பேசியதையும், இதர பத்திரிகைகள் வாயிலாக எழுதி வெளியிட்டதையும் யாம் கேட்டும் படித்துமிருக்கின்ரேம். ஆனல் அவர்களுடைய பேச்சும் எழுத்தும் முறையீடுமாகிய எல்லாம் செவிடன்காதிற் சங்கநாதம் போலவும் காட்டிலெறித்த நிலாப்போலவும் பயன்படாதொழிந்தன. "இல்லானுக்கன்பிங் கிடம் பொருள் ஏவல்மற், றெல்லாமிருந்து மவற்கென்செய்யும்........" என்ரங்கு, இந்த நாட்டிலே சகல வளங்களும் இயற்கை வசதிகளுமிருந்தாலும் இந்நாட்டினர்க்கும் நாட்டைப் பரிபாலிப்போருக்கும் கைத்தொழில் விவசாயத் தொழிலிலே மன ஊக்கம் இல்லாத பொழுது வரக்கூடிய நன்மைதான் யாதோ?

இந்த இலங்கை முற்காலத்திலே விவசாயம் கைத்தொழில் வாணிகம் என்னுமிவைகளில் விருத்தியுற்றிருந்ததென்பதும், அந்நிய நாட்டினர் அரும் பெரும் பொருள்களைப் பெறும் பொருட்டு இந்நாட்டிற்கு நாவாய்மூலமாக வந்து அவற்றைப்பெற்று மீண்டார்களென்பதும் இழந்துப்பொருள்களிற் சில ஏனைய நாடுகளில் அக்காலத்திற் பெரிதும் மதிப்புடன் ஏற்கப்பட்டனவென்பதும், அக்காலத்திருந்த மூதாதையர் தம் வாழ்க்கைக்குரிய இன்றியமையாப் பொருள்களுள்ளும் ஏனைய பொருள்களுள்ளும் பலவற்றை இங்கே தாங்கள் ஆக்கி உபயோகித்து, சிலவினுஞ் சிலவற்றின் பொருட்டே அந்நிய நாட்டை எதிர்பார்த்திருந்தனரென்பதும் மரக்கல மூலமாக வாணிபஞ் செய்யும் விஷயத்தில், இந்த இலங்கை மக்கள் இவர்களுளளும் இவ் வியாழ்ப்பாண மக்கள் சிறந்தவர்களாயிருந்தனரென்பதும், இலங்கையிற் பொருந்திய இயற்கை வளனும் இங்குள்ள மக்கள் ஆக்கி வந்து பெறுதற்கரிய பண்டங்களுமே மேலைத்தேசத்தாரை இந்த இலங்கைக்கு வரும்படி இழுத்துவிட்டனவென்பதும் இனையபிறவும் இந்நாட்டின் சரித்திர வாயிலாகவும் இங்குள்ள பழைய சாதனங்கள் வாயிலாகவும் ஒருவாறு அறியத்தக்கனவாம். இவ்வாருன வளப்பத்தோடு கூடிய இலங்கை இந்தக் காலத்திலே எதற்கும் அந்நியநாடுகளையும் நாட்டினரையும் நம்பி இப்படி அவலப்படவேண்டி நேர்ந்தமைக்குக் காரணமென்னவென்பதையும் காரணர் யாரென்பதையும் பழைய நிலைமையை இந்நாட்டினர் இனிமேலாயினும் அடைதல் முடியுமோ என்பதையும் நமது பேராசிரியருடைய வியாசத்தையொட்டி இனிமேல் எழுத உத்தேசித்துள்ளேம்.

---

## ஈடனும் வெல்ஸும் மொஸ்கோ செல்வர்?

லண்டன், ஆக 15

டெயிலி ஹெரால்ட் பத்திரிகையின் குவிபெக் நிருபர் தமது பத்திரிகைக்குப் பின்வருமாறு ஒரு செய்தியனுப்பியிருக்கிருர்:-

குவிபெக் மகாநாடு முடிந்தபின் அந்நியநாட்டு மந்திரி மிஸ்டர். அந்தோனி ஈடனும் அமெரிக்கஅரசாங்கக் காரியதரிசி மிஸ்டர்.ஸம்னர்வெல்ஸும் மொஸ்கோவுக்குச் செல்வார்கள். மிஸ்டர். சர்ச்சிலும் ஜனதிபதி மிஸ்டர். ரூஸ்வெல்டும் மூன்றுநாட்கள் கலந்து பேசியதன்பின் இவர்களை அனுப்பும் தீர்மானத்துக்கு வந்தனர். நியூயோர்க் மாகாணத்திலுள்ள ஜனதிபதியின் மாளிகையில பிரதமமந்திரியும் ஜனதிபதியும் சந்தித்தனர். சிஸிலிக்குப்பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று குறிப்பிடும் ஆங்கிலோ அமெரிக்கத் திட்டங்களின் முழு விவரங்களையும் இவ்விரு தூதர்களும் ஸ்டாலினுக்கு அறிவிப்பார்கள்.

மிஸ்டர். அந்தோனி ஈடனேடு மிஸ்டர். ஸம்னர்வெல்ஸும் மொஸ்கோ செல்வாரென்று கூறும் செய்தியைப்பற்றி [illegible] கூறப்படவில்லை.

# உலகம்பலவிதக் கதை

(முற்ருெடர்)

### "கொண்டபின் குலம் பேசாதே"

மீண்ட முருகுப்பிள்ளையுடையார் சிந்தனையோடு கூடியவராய், சிதம்பரப்பிள்ளை வீட்டிற்கு நேரே போதலின்றித் தம்வீட்டிற்கே போனர்; "குமாரசுவாமியைக் காலகதியிற் சம்மதிக்கச் செய்யலாம்; ஆனல், அந்த வாலிபன் சொன்ன பதிலை நான் இப்பொழுது நேரேபோய்ச் சிதம்பரப்பிள்ளைக்குச் சொன்னல் 'முடக்கழுதைக்குச் சறுக்கியது சாட்டு' என்ற விதமாக, சிதம்பரப்பிள்ளை குமாரசுவாமி சொன்ன மறுமொழியையே காரணமாகக் காட்டி இச் சம்பந்தத்தைச் செய்துவைக்காது விடுதலுங்கூடும்; ஆனதால் இன்னும் இரண்டொரு தினம் கழித்து அந்த வாலிபனைக் கண்டுபேசி முற்றெடுத்த பின்பு சிதம்பரப்பிள்ளையிடம் போவதே நல்லது" என்று யோசித்து நிச்சயப்படுத்திக்கொண்டார் உடையார்; இவை இவ்வாருக, தன் மகன் சுந்தரேசுவரியைக் கல்யாணஞ் செய்வதற்கு அந்த நேரத்தில் உடன்படாமை சின்னம்மாளுக்கு அதிக கவலையை ஆக்கிவிட்டது. தன் மகன் சம்மதஞ்சொல்லாவிட்டால், பெண்ணின் தகப்பன் வேறு கல்யாணம்பேசி யொழுங்குபண்ண முயற்சி செய்வாரென்பதையுஞ் சின்னம்மாள் அறிவாள்; உடையாருக்கு மகன் சொன்ன நியாயஞ் சரியானதால், அவனிடம் "நீ இந்தக் கலியாணத்திற்கு உடன்படு" என்று சொல்லுதற்குந் தாய் மனங்கோணினள். இப்படிச் சின்னம்மாள் கொள்ளித்தலையில் எறும்பதுபோல மனச்சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தில், இளைய மகளாகிய புவனேசுவரி தாயிடம் வந்து அவள் முகவாட்டத்தை அவதானித்து, தானுந் துயர்கொண்டாளாய் "அம்மா, ஏன் கவலைப்படுகிறீர்கள்; உங்கள் முகம் வாடியபடி காணப்படுகிறதே" என்று ஆவலுடன் வினவினள். "எனக்கொரு கவலையுமில்லையடியம்மா, நான்பெற்ற மக்கள் நீங்கள் இருக்கும்போது எனக்கென்ன கவலை" என்று தாய் சொல்லித் தன் கவலையை மறைக்க முயன்ருள்; ஒருவர் தம்மிடத்து அன்புடையார்க்குத் தாம் கொண்ட கவலையை மறைத்தல் இலகுவல்ல. மகள் மீட்டும் மீட்டுங் கேட்க, தாயின் கவலை அதிகப்பட்டது. கண்களில் நீர் ததும்பியது; இன்னமும் நான் சொல்லாது மறைத்தால் என் பிள்ளை அதிகம் மனம் வருந்துவாள்" என்றெண்ணி மகளைப் பார்த்து "கண்ணே, புவனம், வேறொன்றுமல்ல. ஒரு நலல கல்யாணம்பேசி வந்தபோது உங்கள் அண்ணன் அதற்குச் சம்மதிக்கவில்லையே யென்பதைப்பற்றித் தான் கவலைப்படுகிறேன்" என்று சொல்லுதலும் "அம்மா, எங்கள் சுந்தரேசுவரி யிருக்க, நீங்கள் வேறு சம்பந்தம் பேசினல் அண்ணு சம்மதிக்கமாட்டார்தானே, அதறகேன் கவலைப்படுகிறீர்கள்? அண்ணுவுக்கு மாத்திரமல்ல, எங்கள் அக்காவுக்கும் அத்தானுக்கும் எவருக்கும் சமமதமாக இருக்கமாட்டாது தானே, அம்மா" என்று புவனேசுவரி சொன்னள். "மகளே, வேறு பெண்ணைக் கல்யாணம் செய்ய உங்கள் அண்ணன் மறுத்தால் நான் ஏன் கவலைப்படப்போகிறேன்; இந்தக் கல்யாணத்தைத் தான் இப்பொழுது செய்வதற்கு உங்கள் அண்ணன் சம்மதிக்கவில்லை" என்று தாய் சொல்ல "அப்படியா" என்று சொல்லி ஏங்கினள் புவனேசுவரி. "ஏன், அம்மா, அவர் மறுத்தார்? ஒருபோதும் மறக்கமாட்டாரே; ஒருபோது எங்கள் அக்காவின் மாமனர் அந்தநாளிற் செய்தவைகளையிட்டு நினைத்து எங்கள் அண்ணர் வெறுப்புக்கொண்டிருக்கிருரோ; அவர் அப்படிப் பட்டவரல்லரே; அல்லாமலும் எங்கள் மாமியும் மக்களும் எங்களுக்குச் செய்த செய்கிற நன்மைகளை நாங்கள் மறக்கமுடியுமா? மேலும் எங்கள் அக்காள் அந்தக் குடும்பத்திற் புகுந்த பின்னும் நாங்கள் குறை சொல்லலாமா? அம்மா, கொண்டபின் குலம் பேசாதே என்று நீங்கள்தானே இடையிடையே சொல்லுவீர்கள்; அண்ணு, ஏன் அம்மா அதற்கு மறுத்துநிற்கிருர்" என்று கவலையோடு கேட்டாள் புவனேசுவரி. "மகளே, உங்கள் அண்ணன் அந்த வீட்டிற் சம்பந்தஞ் செய்ய மறுக்கவில்லை; இப்பொழுது கல்யாணஞ் செய்யச் சம்மதமில்லையென்று எங்கள் முருகுப்பிள்ளையுடையாருக்குச் சொன்னதாக அவர் எனக்குச் சொன்னர்; இனி உடையார் அந்த மறுமொழியை அங்கேபோய்த் தெரிவித்தால், பெண்ணின் தகப்பனர் சிலவேளை தம் மகளுக்கு வேறு எங்கேனும் சம்பந்தம் பேசுவிக்கக் கூடுமென்று நான் பயப்படுகிறேன்; இதுதான் செய்தி மகளே" என்று தாய் சொல்ல, மகள் அதைக் கேட்டுச் சிறிது மனந்தேறியவளாய் "அம்மா, ஏன் எங்கள் அண்ணர் இப்பொழுது கல்யாணஞ் செய்தற்கு உடன்படாமல் நிற்கிருர்? அந்த நியாயத்தை நீங்கள் அவரிடமிருந்து அறியவில்லையோ" என்று பின்னரும் ஆவலுடன் கேட்டாள், தாய் காரணத்தை வெளியிடுதற்கு மறுகினள். "பெற்ற பிள்ளைக்கு உற்றதைச் சொல்லாமல், வேறு யாருக்கு அம்மா சொல்லப் போகிறீர்கள்; ஒன்றும் ஒளியாமல் எனக்குச் சொல்லுங்கள்" என்று புவனம் தாயை இரந்து கேட்க, தாய் "வேறொன்றுமல்லவடி கண்ணே, உன்னையொரு கரையிற் சேர்த்துவிட்டு அதன்பிறகுதானும் தான் விவாகஞ் செய்வதென உங்கள் அண்ணன்உடையாருக்குச் சொன்னதாக உடையார் எனக்குச்சொன்னர். இதை உனக்குச் சொல்லாமல் மறைக்கப்பார்த்தேன் மகளே, நீ நெருக்கி என்னைக் கேட்டபடியால் இப்பொழுது வெளியிட்டேன்" என்று கவலைகூரப் பதில் பகர்ந்தாள்.

### எல்லாம் சிவன் செயல்

இவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே புவனேசுவரியிடத்திற் குறைந்திருந்த கவலை பழையபடி அதிகப்படலாயிற்று; அவள் சிறிது நேரம் யாதும் பேசிலள். மகள் கவலைப்படுவதைத் தாய் கண்டாள்; "இதற்காகத்தான், மகளே, இப்படியான கருமங்களை நான் உங்களுக்குச் சொல்லப் பின்னிற்பது; நீ கவலைப்படவேண்டாம்; உங்கள் அண்ணனிடம் நான் இவைகளைப் பற்றி இன்னமும் ஒன்றும் பேசவில்லை; நான் வற்புறுத்திச் சொன்னல் என் பிள்ளை கேட்பான்" என்று மகளுக்கு ஆறுதல் சொல்ல, அவள் ஒருவாறு மனந்தேறி "அம்மா, எல்லாம் சிவன்செயல், அந்த அப்பனுடைய அருள் இருக்குமானல் எங்களுக்கு எவ்வகையான குறையும் வரப்போவதில்லை; அந்த

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வங்கொள்கை

திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை

திரு. வி. கலியாணசுந்தரனுர், சமயம், தாய்மொழி, கலை, தொழிலாளரியக்கம், அரசியல் என்னும் துறைகளில் சுமார் நாற்பது ஆண்டுகளாய் அரும்பெருந் தொண்டுகள் ஆற்றிவந்துள்ள ஒரு சிறந்த பேச்சாளரும் எழுத்தாளருமாகிய பேரறிஞர். பல்வகைத் தொல்லைகளாலும் இன்னல்களாலும் சலிப்படையாமலும் தன்னல வேட்கையின்றியும் அறிவுப்பணியை ஆண்மையுடன் தொடர்ந்து செய்து வரும் வாழ்க்கையை நோக்குங்கால், "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் இன்பச் செவ்வி மன்பதை எய்த அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையன்" என்னும் மணிமேகலை அடிகள் நினைவிற்கு வருகின்றன. இவ்வாறு இவர் தமது அறிவாற்றலையெல்லாம் மனமுவந்து பிறர்க்கெனப்பயன்படுத்தி வர இவரைத் தூண்டிநிற்பது யாது?

அது இவர்தந் தெய்வங் கொள்கையாகும். கற்றவர்களில் தெய்வம் உண்டு என்போரும் இன்றென்போரும் பலராகவோ சிலராகவோ என்றும் இருந்து வந்துளர். இது வியப்பன்று. "தெய்வம் உண்டென்பதோர் சித்தம் உண்டா" தற்குமுன் மக்கள் தாண்டி வர வேண்டிய தடைகள்-ஏறவேண்டிய படிகள்-பல உள. இவற்றுள் கல்வியும் ஒன்றென்ப. அப்படி தாண்டி வந்து அகக்கண் திறக்கப்பெற்று உள்ளொளியால் செம்பொருட் காட்சிபெற்ற ஒரு சிலர்தாம், ஒன்றென் றிருதெய்வம் உண்டெனறிரு" என்று அதிகாரத்துடன் பேச வலுனராவர். இத்தகைய திட உள்ளுணர்வே திரு. வி. கலியாணசுந்தரனாது வாழ்க்கையில் மூழ்கித்து அதன்பால் கட்டற்ற அறத்தொண்டினைத் தோற்றுவித்துச் சிறப்புடன் வளர்த்து வந்துள்ளது.

இனி, இத் தனிப் பெருந்தெய்வத்தின நிலைகள், தெய்வமூர்த்தங்களின் உண்மை, உயிரியலபு, இயற்கையின் மாண்பு, இயற்கைக்கும் இறைவனுக்குமுள்ள இயைபு, உயிர்கட்கு உலகு செய்யும் உதவி, பெண்ணின பெருமை, மக்கள் வையகத்து வாழவேண்டிய முறைமை, மோக்கம் முதலிய அரும் பெரும் பொருள்களபற்றி இவ்வாசிரியர் தமது விழுமிய தமிழ்நூலகளில் விரிவாய்ப்பேசியுள்ளார். இச்சிறு கட்டுரையில இவரது தெய்வங் கொள்கை ஒன்றைப்பற்றியேனும் விரிவாக வதும எழுத இடனின்று. சுருக்கமாகச் சிறிது வரையலாம்.

நம் கண்ணுக்குப் புலப்படும் சிலவும் புலப்படாதது பலவுமாயுள்ள 36 தத்துவங்கள் சேர்ந்த ஒன்றே இயற்கை என்பது. அதனை உடலாகக்கொண்டு, ஒரு தனிப்பெரும் இறைவன் அதனுயிராக உண்ணின்று இயக்குகிறுன். இங்ஙிலையேயன்றி; இயற்கையைக் கடந்துள்ள தன்னந்தனியாயிருக்கும் பிறிதொரு நிலையும் இறைவனுககுண்டு. மாயாகாரிய இயறகை முழுவதும் அவன் வயமுள்ளது. இயறகையில் வாழும உயிர்களும் அவன் வியாபகத்தற்குட்பட்டவை. அவற்றை அவன இயற்கையோடியைத்துப் பிறவிகள் தந்து வாழவைப்பதெல்லாம் அவைகள்மாட்டு அவனுக்கு இயல்பாயுள்ள அருளினாலே தான.

இயற்கையைக் கடந்த இறைநிலை உயிர்காது மாற்றமும மனமும் கழியநிறபதொன று.எனவே அதனை ஈடுதது, இயற்கையெனனும் அவனது திருமேனியை அவரவர்க்கு ஏற்ற முறையில் அன்பினுல் வழிபட்டுத் தியானித்து அத்தியான முதிர்ச்சியால் உள்ளொளி விளங்கப் பற்றுல் அவனையும காணலாம். அவ்விற்கைதானும் முற்றவும் நம் மனஅறிவில் அடங்கா அளவினது; மாட்சிமைத்து. ஆதலால் அதனை மனத்தில்வைத்துத் தியானிற்தற்கு ஏற்றவாறு தத்துவப்பொருளுடைய ஓவியங்களாக, தெய்வ உருவங்களாக, உண்மை கண்ட பெரியோர் நமக்குத் தந்துள்ளனர். அத்தகைய பொருட்செறிவுடைய இயற்கை ஓவியங்களை-தெய்வத் திருவுருவங்களை-வழிபட்டுத் தியானித்தாலன்றி இறைவனை என்றும் எய்த வொண்ணுது; இகவாழ்வும் பரவாழ்வும இனிது சிறவா. ஆதலின் சமயப்பூசல், சாதிவேற்றுமை கடந்த சமரச சன்மார்க்க நெறிநின்று இயறகை வழியே நின்று அன்பும் அறனும் உடைய இல்லறம் பூண்டு, கட்டற்ற அருட்டொண்டாற்றி, மேற்சொன்ன உருவ வழிபாட்டினுல தியானம் செய்து, உள்ளொளியால செம்பொருளைக்கண்டு சிவநிலையடைதலே எல்லா மக்கட்கும் உரிய செந்நெறியாகும் என்பது.

இப்போதனைகள் எல்லாம் போதியஅளவு சாதனையைக் கொண்டே எழுந்தவை. நமது முதலியார் இளமைதொட்டே முருகன் திருவுருவத்தில் சிறப்புவகையில் இடுபாடுடையவர். நாள்தோறும் கண்விழித்தெழுந்தவுடன் இத்திருவுருவமும, பார்த்தசாரதிப்பெருமாள் திருவுருவமும், அவர்க்குத தவருது காட்சியளிக்கும். இது மட்டுமன்று. இவர் தம் நீண்டவாழ்க்கையைத் தெய்வம் அவ்வப்போது தோன்ருத் துணையாய் நின்று, அவரை மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சிக் கூழுகளும் நலகி, செமமைப்படுத்தி வந்துள்ளது. அவர் வாழ்க்கையும் நூல்களும் தெய்வமுளதென்பதற்குப் பகரும் சான்றை உலகம் அன்பார்ந்த நன்றியுடன் வரவேற்கும்.

—சித்தாந்தம்

## கொழும்பு விவேகானந்த சபை

இந்துசாதனப் பத்திராசிரியரவர்கட்கு:-

"அன்பார்ந்த ஐயா!

"விவேகானந்தசபையின் நிர்வாக சபையினரால் பின்வரும் தீர்மானம் சென்றகூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. பாடசாலைக்குச் செல்லும் சகல மதங்களைச்சேர்ந்த மாணவர்களும் தத்தம் மதங்களுக்குரிய விசேடபுண்ணியதினங்களைக் கொண்டாடுதற்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் அளிப்பது அவசியமாதலால முக்கிய அரசாங்க விடுமுறை நாட்களாகும் தைப்பொங்கல் திருநாள், பெரியவெள்ளிக்கிழமை, இந்துவருஷப்பிறப்பு, விசாகப்பெருநாள், போசன் திருநாள், ஆடி அமாவாசைததினம, கிறிஸ்மஸ் பண்டிகை, முஸ்லிம ஹஜ்ஜி ஆகிய விடுமுறைநாட்கள் அரசாங்கப்பாடசாலைகளிலும் அரசாங்க நன்கொடைபெறும பாடசாலைகளிலும் விடுமுறை நாட்களாக்கப்படுதல் வேணடும். ஆதலின இச்சபை அங்ஙனம் அவைகளை விடுமுறை நாட்களாக்குதற்கு வேண்டியவற்றைச் செய்யுமாறு கௌரவம் பொருந்திய கல்வி மந்திரியாரவர்களைத தாழ்மையுடன வேண்டிக் கொள்கிறது."

—கி. தி

# கந்தபுராணக் கவி நயம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

கந்த புராணத்தை இக்காலத்தில் அதிகமாகப் படிப்பவரிலர். தமிழ்ப் பண்டிதர்கள்தாமும் அதனை முற்றும் படித்தவர் சிலரினுஞ் சிலரேயாவர். இப்பாகங்களில் பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் படிக்கப்படுவது போல் கந்தபுராணம் படிக்கப்படுவதில்லை. சைவப் பிரசங்கஞ் செய்வோர் கந்தபுராணச் சுருக்கத்தை மிகுதியாகக் கையாடுகின்றனர். கந்தபுராணப் பிரசங்கம் ஒருவரும் இப்போது செய்வதில்லை. செய்யக் கூடியவர்களுமில்லையென்று சொல்வது இழுக்காது சிவபுராணங்களுட் கந்தபுராணஞ் சிறந்தது. சிவபெருமானது ஏற்றம் அதன்கண் கூறப்பட்டிருப்பது போல் வேறெப் புராணத்திலுங் காண்பதரிது. பல வேதவாய்மைகளையும் உபநிடதக் கருத்துக்களையுங் கொண்டுள்ள கருவூலம் என்று சொல்லத் தக்கது. தமிழ்க் கந்தபுராணம் சொல்நயம் பொருள்நயத்தாற் சிறந்தது. *கம்ப இராமாயணத்திற்குப் பின் வாங்குவதன்று. சில கவிகளின் அருமைகளை எடுத்துக் காட்டுதும்::

இறைநில மெழுதுமு னிளைய
பாலகன்
முறைவரை வேனென
முயல்வ தொக்குமால்
அறுமுக முடையவோ
ரமலன் மாக்கதை
சிறியதோ ரற்வினேன்
செப்ப நின்றதே

இது அவையடக்கத்து முதற் செய்யுள். எழுத்தை எழுதுவதற்குக் கற்றுக் கொள்ளுஞ் சிறுவன் ஒரு நூலை எழுதி முடிப்பேன் என்று துணிவதை யொக்கும் யான் இக் கந்தபுராணத்தைப் பாடத் துணிந்தது என்று சிவாசாரியார் தம்மை எழுத்தறியாப் பாலகனோடு ஒப்பிடுகின்றுர். உவமை மதிநுட்பமுடையது.

புவியின ரேனையர் புராணந்
தேரினுஞ்
சிவகதை யுணர்கில ரென்னிற்
றீருமோ
அவர்மய லரசனை யடைக்கிடா
ரெனில்
எவரெவ ராக்கமு மினிது
போலுமால்

சிவகதைகளைத் தெரிய வேண்டிய அவசியத்தையும் மற்றக் கதைகளெல்லாம் அவகதை யாகலின் அறிய வேண்டியது அநாவசியமென்பதையும் உணர்த்துகின்றுர்.

தோற்ற மீறின்றித் தோற்றிய
சூர்ப்பகைக்
கேற்றகாதைக் கெவன்
பெய ரென்றிடின்
ஆற்ற மைம்புலத் தாறுசென்
மேலையோர்
போற்று கந்தபுராணம்
தென்பதே

சிவபெருமானைப் போல் முருகக் கடவுளும் ஆதியு மந்தமு மில்லாதவர் என்று கூறியிருப்பது நோக்கற்பாலது. பெம்மான் முருகன் பிறவான் இறவான் என்பது கந்தானுபூதி.

சுந்தர வயிரவத் தோன்றல்
மீமிசைக்
கந்தடு களிற்றுரி கவைஇய
காட்சிபோல்
முந்துறு சூன்முகில் முழுது
முற்றுற
நந்தியம் பெருவரைமீது
நண்ணிய

மேகத்தின் தோற்றம் வயிரவக் கடவுள்மீது யானைத் தோலைப் போர்த்தாற் போலக் கருமையாயிருந்த தென்பதாம். இங்கே வயிரவக் கோலத்தை நினைப்பூட்டுவது ஆசிரியரின் சிவநேயத்தைக் காட்டுகின்றது.

பூட்டு கார்முகந் தன்னெடுந்
தோன்றிய புயலவாய்
ஊட்டு தண்புனல் நந்தியங்
கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனர்
மஞ்சனம் விமலற்
காட்டு கின்றதோர் தனிச்
செயல் போன்றுள தன்றே

மேகங்கள் நந்தியங்கிரிமீது மழை பொழிவதைக் கண்ணப்பர் காளத்தியப்பரைப் பூசித்தமைக்கு ஒப்பிடுவது குறிப்பிடத் தக்கது. ஆசாரியர் ஒப்புவமை யெல்லாம் சிவசரிதமாகவே இருப்பது மெச்சத் தகுந்தது. மற்றுஞ் சில பாக்களில் பாலியாற்றைச் சிவபெருமான், திருமால், பிரமன் முதலியதேவர்களுக்குஒப்பிட்டிருத்தல் யூடித்தின்புறற்பாலது.

உதிருகின்றசிற் றுண்டிகொண்
டொலிபுனற் கூடன்
மதுரை நாயகன் மண் சுமந்திட்ட
மாநதியின்மேல்
முதிரு முத்தமிழ் விரகன தே
டென மொய்ம்மீன்
எதிர்பு குந்திடப் போவது
பாலியா மியாறு

இங்கே பிட்டுக்கு மண் சுமந்த சரிதத்தையும் வையையில் இட்ட திருப்பாசுரமேடு எதிரேறிச் சென்ற அறபுதத்தையுங் குறிப்பிட்டிருக்கும் அழகு நோக்கத் தக்கது. இரண்டு சமயாசாரியர்களை ஒரே பாட்டில் குறிப்பித்துள்ளார் சிவாசாரியர்

கால்கிளர் கின்றநீத் தங்கவிரிதழ்க்
கலசக் கொங்கைச்
சேல்கிளர்க் கரியவுண்கட்டிருநுதன்
மிழற்றுந் தீஞ்சொல

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

*[கந்தபுராணத் திருவிருத்தங்கள் ஒப்புயர்வற்றன; கம்பர் திருத்தக்கதேவர் முதலாம் புலவர்கள்செய்த கவிகளோடு கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் பாடியருளிய கந்தபுராணத் திருவிருத்தங்களை ஒப்பிடவொண்ணுது; கந்தபுராணத் திருவிருத்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மந்திரமென்று இந்த யாழ்ப்பாணத்துள்ள அறிஞர்கள் பாராட்டிப் பாராயணஞ் செய்து வருகிறுர்கள். செந்தமிழ் நாட்டிலுள்ள புலவர்கள் கந்தபுராணத் திருவிருத்தங்களின் மகத்துவத்தை என்றும் வியந்து பாராட்டியுள்ளனர். "... ... சலதியமுதினைநிகர் செந்தமிழதான, காதன் மழைபொழியும் அருட்கொண்டலான கச்சியப்பனிருபாதம் உச்சி வைப்பாம்" எனக் கூறிப்போந்தார் சம்பந்த சரணலய சுவாமிகள். "அற்புத சின்மய அதிமதுர கவியாகிய கந்தபுராணத்தை..." என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் வாக்கியமாகும். "இது அறுமுகக் கடவுண் மகிமையெல்லாம் அங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துரைக்கும் திவ்விய புராணமாய்த் தமிழ்ப்பெருங் காப்பியமாய் நிலவுவது; இதன் செய்யுட்கள் திராட்ச, கதலி, இட்சு, நாளிகேர பாகங்கள் கொண்டன. இது நவிறொறும் நவிறொறும் நாநயம் பயப்பது; பயிறொறும் பயிறொறும் அறுமுகக் கடவுள் திருவடிப்பத்தி ஞானம் விளைப்பது..." என ஸ்ரீமத் சபாபதி நாவலரவர்கள் வரைந்துள்ளார்; கந்தபுராணக் கவிகள் படிக்குந்தோறும் பக்திச்சுவை நனி சொட்டும் இயல்பின என்னுங் கருத்தமையக்கூறியுள்ளார் திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள்; "கவியரசாம் கச்சியப்பர்" என்றுர் திருவிளையாடற் புராணத்திற்கு உரைகண்ட திருவேங்கடசாமி நாட்டார். கந்தபுராணத் திருவிருத்தங்களைப் பாராட்டிக் கூறிய அறிஞர் இன்னும் பலராவர்; விரிவஞ்சி ஈண்டுக்கூறுது விடுத்தாம்; கந்தபுராணத்தில் எடுத்தாளப்பட்ட அரும்பெரும் விஷயங்கள், பன்னிரு தடந்தோள் வள்ளல் நவையறு காட்சிநல்கப்பெற்றவராகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளாலன்றி வேறு எப்புலவராலும் எடுத்தாளத்தக்கன. பத்திராசிரியர்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணக் கவி நயம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

மேல்கிளர் பரவையல்குல்
மெல்லியல் தண்
மென்கூந்தல்
மால்கிளர் கணிகைமாதர்
மனமெனப் போயிற்றன்றால்

பாலியாறு பல கால்வாய்களாகப் பிரிந்தோடுவதை விலை மாதர்களது மனத்திற்கு ஒப்பிடுகின்றார். 'இருமனப் பெண்டிர்' என்று குறளிற் கூறப்பட்டிருப்பதை இங்கே ஒப்பு நோக்க.

கள்ளினு மூளதுகொல்
கருத்தழிப்பதே
களிப்பவர் தமக்குமோர்
கதியுண்டாகுமோ

இவ்விரண்டு அடிகளாலும் கட்குடித்தலின் இழிவை இடித்துக் கூறுகின்றார் ஆசிரியர்.

பிறப்பதும் வளர்வதும் பின்னர்
மூப்புவந்
திறப்பதும் வைகலு
மூலகி லேய்ந்தெனச்
சிறப்புட னடுவதும் பருவஞ்
செய்வதும்
அறுப்பதுந் தொகுப்பது
மூலப்பின் றுயவே

ஆன்மாக்கள் உலகிற் பிறந்து வளர்ந்து இறப்பது போலப் பயிர்களும் முளைத்து வளர்ந்து அறுக்கப்பட்டொழிகின்றன. ஒப்புமை சாலச் சிறந்தது.

நெறியிடை யொழுகலா விழுதை
நீரரை
மறலிதன் னகரிடை வருத்தல்
போலுமால்
குறைபடத் துணித்தவண் குவை
செங் கன்னலை
அறைபடு மாலைக ளிடை
யிட் டாடவே

கரும்புத் துண்டுகளை ஆலையி லிட்டு ஆட்டுதலை யமன் இழிகுணமாக்களை நரகத்தில் செக்கிலிட்டுத் தண்டிப்பதோடு ஒப்பிடுகின்றனர்.

தேக்கு தெண்டிரைப் புணரிநீர்
வெம்மையைச் சிந்தி
ஆக்கிவா லொளியுலகில்விட்
டேகலா லடைந்தோர்
நீக்கரும் வினைமாற்றி நன்னெறி
யிடைச் செலுத்திப்
போக்கின் மேயின தேசிகர்ப்
பொருவின புயல்கள்

மேகங்கள் கடல் நீராகிய உப்பு நீரை நன்னீராக்கி உலகத்திற்கு மழையாகப் பயன்படுத்தல் ஆசாரியர் மாணவர்களை உபதேசஞ் செய்து நல்வழிப்படுத்துவதற்கு உவமிக்கும் அழகு பாராட்டத் தக்கது.

## தேகவியோகம்

தெல்லிப்பழை வீமன்காமத்தில் பிரபலிய சைவத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவரும், சைவாசார ஒழுக்கம், ஆன்மார்த்தபூசை முதலிய சற்கருமங்களிற் சிறந்தவரும் தெல்லிப்பழை உடையாராயிருந்து தற்போது இளைப்பாறியவருமாகிய விநாயகர் அருணாசலம் தம்மைப் பீடித்த நோய்காரணமாக 6-8-43 வெள்ளிக்கிழமை பகல் தமது மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், சுற்றமித்திரர் பிரலாபமுறத் தமது இவ்வுலக வாழ்வை நீத்தனர் என்னுந் துக்கச்செய்தியைத் தெரிவிக்கவேண்டியவர்களாகின்றோம். இவரைப் பிரிந்து வருந்தும் சுற்றமித்திரர்களுக்கு எமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

வேதமே முதல் யாவையு
முணர்கினு மேலாம்
ஆதி வானவன் கறைமிடற்
றிறையென வறியாப்
பேதை மாக்கள்தம் முணர்வென
வலைந்து பேர்கின்ற
சீதநீரெல்லாந் தெளிதலின் றுயது
சிறிதும்

வேதங்களைப் படித்தும் சிவபெருமானை முழுமுதற் கடவுள் என்னும் உணர்ச்சி யில்லாதவரை எருமை மாட்டிற்கு ஒப்பிடுகின்றார். கலங்கிய நீரையே எருமை பருகும்; தெளிந்த நீரைப் பருகாது. தெளிவுள்ளவர் இறைமைக் குணங்களில்லாதவரை இறைவரெனக் கருதார்.

திடைவந் தென்னப்
பாசடை நடுவட் பூத்த பங்கயத்
தடாகம் யாவுந்
தேசுடைத் தாங்க நீத்தச்
செலவினூற் சிந்தை மன்னோ
பேசிடிற் சிறுமையெல்லாம்
பெருமையால் அடங்கு
மன்றே

பெருமையாற் சிறுமை அடங்குமென்பது பழமொழி. இதனை இங்கே ஆண்டிருப்பது நோக்கத் தக்கது.

மாறடு மள்ளருய்ப்ப மருதத்தி
னிறைந்து விஞ்சி
ஏறிய நாரமீட்டு மிருங்கட
னோக்கிச் சென்ற
வேறுகொள் புலனை வென்றோர்
மேலைநன் னெறியுய்த்ததாலுந்
தேறிய வுணர்விலாதோர்
செல்வுழிச் செல்வரன்றே

இது வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணர்வைக் கூறுகின்றது.

—தொடரும்.

## கண்டிப்பெரஹெரா நடத்த முயற்சி

### அரசாங்கசபையின் கண்டிப் பிரதிநிதிகளின் சிரத்தை

வழக்கமாக நடைபெற்று வரும் காலத்திற்குச் சற்றுப் பிந்தியபோதிலும் இவ்வருடம் கண்டிப் பெரஹராவை நடத்தித்தீரவேண்டுமென்ற ஒரு இயக்கம் பலமடைந்து வருவதாகத் தெரிகிறது.

அரசாங்கசபையைச் சேர்ந்தகண்டிப்பகுதிப் பிரதிநிதிகள் சிலரே இவ்வியக்கத்துக்குக் காரணபூதர்களென்று தெரியவருகிறது. ஆலய அதிகாரிகளின் மகாநாடொன்றைக் கூட்டும்படி குறித்த பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர். குறித்த மகாநாடு இன்று நடைபெறவிருக்கிறது. பெரஹரா நடைபெறுவதானாற் பகல்வேளையிலே திட்டமான சில வீதிகள்வழியே நடைபெறுமெனத் தெரிகிறது.

பொலீஸார் வழக்கம்போல் இவ்விழாவின்போது தங்கள் கடமைகளைச் செய்துவரக்கூடும். ஏதாவது நெருக்கடி ஏற்படுங்காலத்தில் இராணுவத்தினரின் உதவி தேவைப்பட்டால் இராணுவ அதிகாரிகளிடம் விண்ணப்பித்துக் கொள்ளப்படுமெனத் தெரியவருகிறது.


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருனு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 5.8—31.12.43)


## நாகப்பிரதிஷ்டையின் தத்துவார்த்தம்

### பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

மூலத்திருவிரல் மேலுக்கு முன்
னின்ற
பாலித்த யோனிக் கிருவிரல் கீழ்
நின்ற
கோலித்த குண்டலியுள்ளே
செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே.

சகல சீவராசிகளினுடைய உடம்பினுள்ளே யிருக்கும் நூறு நாடிகளின் நடுவில் பாம்புவடிவமாக மண்டலமிட்டுக் கிடக்குந் தன்மையான குண்டலிசக்தியொன்றுண்டு. அதுவே மற்றைய சக்திகளுக்கெல்லாந் தலைமையானதும் பரிசுத்தமுடையதாகும். நமக்குச் சஞ்சலமுண்டாவதற்குப் பொருந்திய காரணமாக யிருப்பது இந்தச் சத்தியேயாகும். மனதைச் சேர்ந்திருக்கும் இருதய நாடிகளெல்லாம் இந்தக் குண்டலி சக்தியிலேயே இணைக்கப்பட்டிருக்கின்றன. சகலயோகாப்பியாசங்களுக்கும் இந்தக் குண்டலி சக்தியே பிராணுதாரமாக யிருக்கின்றது.

சொரூபதரிசனத்திற்குக் குண்டலிசத்தியை எழுப்புதல் அத்தியாவசியமாகும். பாம்பாட்டிச் சித்தர் என்பவர் "ஆடுபாம்பே எழுந்தாடு பாம்பே" எனறு பாம்பை முன்னிலைப்படுத்தி ஒரு பாடல் செய்திருக்கின்றனர். அந்தப் பாட்டு வெள்ளையாக யிருக்கினும் தத்துவார்த்தங்களின் மேலதாகிய அற்புத ஞானப் பாடலேயாகும். அவர் பாம்பென்று காட்டியது இந்தக் குண்டலி சக்தியையே என அறியக்கிடக்கின்றது. இங்ஙனம் மறுமைப் போகங்கள் எல்லாவற்றிற்கும் மேம்பட்ட மோட்சசாதனத்திற் காதாரமானதுமாகிய இக்குண்டலிசக்தியின் வடிவை மனசில் பாம்புவடிவமாக யோகிகள் வழிபட்டுச் சந்தோஷிப்பது போல கிரகஸ்தர்கள் வெளியில் வழிபாடாற்றின் எல்லாப் போகங்களினும் சிறப்புற்ற புத்திரபாக்கியத்தை உண்மையாகப் பெற்றுக்கொள்வாரென்பதை உத்தேசித்தே நாகப்பிரதிஷ்டா விதியை உண்டாக்கினார்களென்பதை யறிக. நாகப்பிரதிஷ்டைசெய்து வழிபடுவதனால் சித்திப்பது புத்திரபாக்கியமொன்றே யல்லாமல் ஆன்மலாபமும் மோட்ச சித்தியுமுண்டாமென்பதை யுத்தேசித்தே குண்டலிசத்தியுருவத்தை, "சுவாமிணநாஜலக்கவைதாம பிரேணசிலையாததா" என்னும் பிரமாணப்படி பொன்னினாலாவது, வெள்ளியினாலாவது, செம்பினாலாவது, கருங்கல்லினாலாவது வரைந்துவழிபடுமாறு சாஸ்திரங்கள் கூறும்.

"விப்ரஸ்யபத்ம லிங்கம் ஸ்யாநாகஸ்தாபந முத்தமம். க்ஷத்திரிய: பஞ்சவக்த்ரஸ்யாத் த்வி நாகமவைஸ்யஜாதகய-ஏகநாகஞ்ச சூத்ராணய" எனனும் பிரமாணப்படி பிராமணர்களுக்காயின் பிணைக்கப்பட்ட நாகத்திற்குக்கீழ் தாமரைப்பூவும் லிங்கமும இருத்தல வேணடும். க்ஷத்திரியர்களுக்காயின் ஐந்துதலையுள்ள நாகமாகச் செய்தல வேணடும், செட்டியர்களுக்காயின் இரண்டு நாகம் பொருந்தியதாகச் செய்ய வேண்டும், சூத்திரர்களுக்காயின் ஒருதலையுள்ள நாகமாய்ச் செய்தல் வேண்டும். இப்படிச்செய்தே நாகப் பிரதிஷ்டை செய்க. (தொடரும்.)

---


விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை



# ஓரியன்ரல் பாங்க் ஒவ் மலாயா லிமிற்றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரைவுளதாய் நிறுவப்பெற்றது)

## 8, மணிக்கூட்டுத்தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் தேசியவங்கி இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. நடைமுறை, ஸ்திரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சேலம், சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப நடைபெற்று வருகின்றன.

எஸ். பீ. யோசேப்,
மானேஜர்.

(Mis. 206. 25-2-43—24-8-43) (வி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை பாடம் பண்ணும் ஸ்தலம்

## திறப்புவிழா வைபவம்

## விவசாய மந்திரியின் விரிவுரை

"புகையிலை பாடம் பண்ணும் இந்த ஸ்தலத்தைத் திறந்து வைக்கும் நோக்கமாக மட்டும் நான் இங்கு வரவில்லை. ஆனால், இந்தத் தொழிலைக் காப்பாற்றுவதில் உங்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றியில் உங்களுடன் சேர்ந்து களிப்படைவதற்காகவே வந்தேன்" என்று விவசாயமந்திரி மிஸ்றர். டி. எஸ். சேனநாயகா சென்றவாரம் யாழ்ப்பாணம் 'ரெக்ளமேஷன்' மைதானத்திலுள்ள யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கப் புகையிலை பாடம்பண்ணும் ஸ்தலத்தையும் கிட்டங்கிகளையும் திறந்து வைத்தபோது கூறினார்.

மிஸ்றர். சேனநாயகா கட்டிடமூகட்டில் சங்கத் தலைவர் மிஸ்றர். டி. ஸி. ராஜரத்தினத்தினாலும் சங்க நிர்வாகசபை அங்கத்தவர்களாலும் வரவேற்கப் பட்டார். புதிய கட்டிடங்களைத் திறந்து வைத்தபின்னர், மந்திரி ஏற்றுமதிக்குத் தயாராகப் புகையிலை அடுக்கி வைத்திருந்த கிட்டங்கிகளைச்சுற்றிப் பார்வையிட்டார். புதிய கட்டிடங்கள் ரூபாய் 70,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டவையாகும்.

ஒரு தோட்டக் கச்சேரிக்குப் பின்னர், மிஸ்றர். ராஜரத்தினம் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் மிஸ்றர். சேனநாயகா மக்களுக்குச் சேவைசெய்வதிலேயே தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்கிறாரென்று கூறினார். பின்னர் அவர் மிஸ்றர். சேனநாயகாவை நோக்கிக் கூறியதாவது:—இன்று எல்லாச் சங்கங்களும் தங்கள்பேரில் நம்பிக்கை கொண்டிருக்குமானால் அந்த நம்பிக்கை நியாயமானதாகும். (கரகோஷம்) தங்களின் அரசியல வாழ்க்கை கீழ்த்தரமானவர்கள் விரும்பும் கௌரவத்தையாவது அதிகாரத்தையாவது லட்சியமாகக் கொண்டதல்ல. தாங்கள் இலங்கையிலுள்ள வறிய மக்களின் தொண்டன். ஆகவே இலங்கையின் உண்மையான தலைவரென்ற முறையில் தங்களுக்கு நாம் நல்வரவு கூறப் பெருமையடைகிறோம். (கரகோஷம்)

மிஸ்றர். ராஜரத்தினம் தொடர்ந்து பேசும்போது சங்கம் 1934-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறினார். மந்திரி அதற்குச் செய்துள்ள உதவிக்காக அவர் நன்றி தெரிவித்தார்.

சங்கக் காரியதரிசியான நியாயதுரந்தரர் மிஸ்றர். வ. டபிள்யூ. நடராஜா ஒரு யாழ்ப்பாணத் தோட்டக்காரர். அவரது புகையிலைத்தோட்டத்தில் நிற்கும்போது எவ்விதம் காட்சியளிப்பாரோ அதேபோல வெண்கலத்தினாற் செய்யப்பட்ட ஞாபகப்பொருள் ஒன்றைச் சங்கத்தின்சார்பாக மந்திரிக்கு உபகரித்தார்.

### மந்திரியின் பதில்

மிஸ்றர். சேனநாயகா தமது பதிலிற் கூறியதாவது:— உங்களின் தொழில் அழிந்தொழிந்து போகக் கூடிய நிலைமையில் ஒரு சமயம் இருந்தது. உங்கள் தொழில் வடபகுதியில் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு தொழில்மட்டுமல்லாமல், அது மிகப்பிரதானமான ஒரு தொழில் என்றும், நான் அபிப்பிராயப்படுகிறேன். ஒரு சமயத்தில ஐக்கியமும் ஒற்றுமையுமில்லாத காரணத்தால் அது அழிந்தொழிந்து போகும் நிலைமையில் இருந்தது. மிஸ்றர். ராஜரத்தினமும் அவரது கமிட்டியுமில்லாதுபோனால் அதை அழியவொட்டாது காப்பாற்றியிருக்கமுடியாதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

சிறிதுகாலம் எனக்கு இத்தொழில் விஷயமாகக் கவலையாகவிருந்தது. சிங்கள விவசாயிகள் மீது எனக்குள்ள சிரத்தை யாழ்ப்பாண விவசாயிகள்மேல் இல்லை என்று பலர் கூறினரென்பதை நான் அறிந்தபோது அக்கவலை மேலும் அதிகரித்தது. என் மீது இவ்விதம் பழிசுமத்தப்பட்டிருந்தபோது அபாயகரமான நிலைமையிலிருந்ததொழிலைப் பாதுகாப்பதற்கு நான் முயற்சிப்பது பெரும் அபாயமானதாகும். ஏனெனில், நான் எனது முயற்சியில் தோல்வியடைவேனானால், உங்களின் தொழிலொரு சிங்களவனாற் பாழாகிவிட்டதென்று சொல்லப்படும். உங்கள் தலைவரதும் அவரது நிர்வாகசபையின் விடாமுயற்சியினால் நான் காப்பாற்றப்பட்டுவிட்டேன். என்னைக் காப்பாற்றுவதன்மூலம் நீங்கள் உங்கள் தொழிலைக் காப்பாற்றிக் கொண்டீர்களென்று நான் நினைக்கிறேன். (சிரிப்பும் கரகோஷமும்)

யாழ்ப்பாண விவசாயிகளை மந்திரி பாராட்டினார். இலங்கையிலுள்ள எல்லோரையும் விடத் தமிழ் விவசாயி மிகுந்த உழைப்பாளியென்றும் அவன் காரியங்களை விஞ்ஞான ரீதியில் செய்கிறானென்றும் அவர் கூறினார்.

மிஸ்றர். சேனநாயகா மேலும்பேசுகையில் மக்களின் முன்னேற்றத்துக்கு விவசாயம் மட்டும் இருந்தாற் போதாதென்றும் வியாபாரமும், கைத்தொழிலும் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

### இரணைமடுத்திட்டம்

நான் யாழ்ப்பாணத்திலிருந்து சிலரை இரணைமடுவுக்குக் கொண்டுபோய் அங்கு குடியேற்ற முடியாதது எனக்குப் பெரும் ஏமாற்றத்தை யளித்திருக்கிறது. அரசாங்கம் இரணைமடுத் திட்டத்திற்குச் சுமார் 20 லட்சம் ரூபா செலவிட்டிருக்கிறது. அரசாங்கம் அத் திட்டத்தின்கீழ் உண்மையான விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுக்காது அரசியலவாதிகளுக்கு அல்லது 'டக்ரா'களுக்கு அல்லது தரகர்களுக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் அத்திட்டத்தை வெற்றிகரமாக்குவரென்று எதிர்பார்க்கிறது. அத்திட்டம் யாருக்காவது பயனளிக்கவில்லை. இரணைமடுவில் குடியேற்றுவதற்குத் தகுந்தவர்களைப் பெற்றுத் தரும்படி நான் சங்கத்துக்கு வேண்டுகோள்விட விரும்புகிறேன். அங்குக் குடியேற்றப்படும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபா 2000 முதல் ரூபா 8000 வரை செலவிடுதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் றெஜிஸ்ட்ராரான திரு. ஜி. டி. சொய்சா அடுத்தபடியாகப் பேசுகையில் இத்தினம் கூட்டுறவு இயக்கத்தின சரித்திரத்தில ஒரு விசேஷ தினமாகுமென்று கூறினார்.

திரு. என். பொன்னையா விவசாய மந்திரிக்கு நன்றி தெரிவித்தார். பின்னர் திரு. ராஜரத்தினம் மிஸ்றர். சேனநாயகாவைக் கௌரவிக்கும் முகமாக ஒருவிருந்து நடத்தினார்.

# உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

இறைவனே எல்லார்க்கும் மேலான தந்தையாவான்; தாயில்லார்க்குத் தாயுமாவான்; அவனையன்றி ஓர் அணுவும் அசையப்போவதில்லையென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம்; புத்தகங்களிற் படித்திருக்கிறோம்; எங்கள் அக்காளின் கருமம் இப்படி நன்மையாய் வருமென்று நாங்கள் ஆரேனும் அந்த நேரத்தில் கனவிலாயினும் எண்ணியிருந்தோமா? இல்லையே; அதுவும் அவன் அருள்தானே! அண்ணன் எனக்காகப் பின்னிற்பதுவும் நான் அண்ணனை நம்பியிருப்பதும் உலக இயல்பையொட்டியே யல்லாமல், தெய்வத்தின் நோக்கத்தை அறிந்தல்ல, அம்மா, எது எது நடக்கவேண்டுமோ அது அது நடந்தே தீரவேண்டும்; "இட்டமுடன் என் தலையில் இன்னபடியென்றெழுதிவிட்ட சிவனுஞ் செத்துவிட்டானே" என்று முன்னே யாரோ சொன்னதுண்டு; அம்மா, அந்தப்பெருமானுடைய திருவருள் இருக்க, பெற்ற தாயான நீங்கள் இருக்க, என்னுடன் பிறந்தோர் இருக்க எனக்கு என்ன குறையிருக்கிறது? நீங்கள் புத்தி சொன்னாலும் எங்கள் அண்ணா அதற்கு நியாயஞ்சொல்லிக்கொண்டிருப்பார்; ஆனபடியால் எங்கள் சண்பகத்தாச்சி மூலம் அவருக்குப் புத்தி சொல்லுவியுங்கள்; அந்த ஆச்சி சொன்னால் அண்ணா கேட்டுக்கொள்ளுவார்" என்று உபாயஞ் சூழ்ந்து சொன்னாள். தாயும் தன் மகள் சொன்ன உபாயத்தை மெச்சினாள்.

## "ஆங்காலம் மெய்வருந்த வேண்டா"

சண்பகத்தம்மாளை வரும்படி யார் மூலம் தெரிவிப்பதென்று சின்னம்மாள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது "ஆங்காலம் மெய்வருந்த வேண்டா" என்றவாறு எவரும் காத்திராத பிரகாரம் சண்பகத்தம்மாளும் காஞ்சனமாலையும் அங்கு வந்தார்கள். அவர்கள் வரவைக் கண்டவுடனே சின்னம்மாளுக்கும் மகளுக்கும் உண்டான சந்தோஷத்திற்கு ஒரு எல்லையில்லையெனலாம். சின்னம்மாளும் மக்களும் அவர்களை வழக்கம்போல் உபசரித்தார்கள்; சண்பகத்தம்மாளும் மகளும் நகுலேசுவரி சுந்தரேசுவரனென்னுமிவர்களுடைய சுகத்தை விசாரித்தபோது "கடவுளருளால் அவர்கள் நல்ல சுகமே யிருக்கிறார்கள், சென்ற கிழமையும் இங்கே வந்து இரண்டு நாள் எங்களோடு தங்கிநின்றுபோனார்கள்" என்று சின்னம்மாள் மகிழ்ச்சியோடு மறுமொழி சொன்னாள். பின்னர்ப் புவனேசுவரியும் காஞ்சனமாலையும் வேறிடத்திற் போய் நானாவார்த்தைகள் பேசிக் கொண்டிருப்ப, சின்னம்மாள் சண்பகத்தம்மாளுக்கு இந்தக் கல்யாணப் பேச்சைப்பற்றியும் தன்மகன் அப்பொழுது உடன்படாமல் நிற்றலையும் அப்படி நிற்றற்குக் காரணமென்னவென்பதையும் விபரமாகச் சொன்னாள். சண்பகத்தம்மாள் கேட்டுப் புன்னகை செய்து "அக்கா, அந்தச் சிந்தனைகளெல்லாம் உங்கள்மகனுக்கு எதற்கு? உங்கள் இளைய மகளை வெளியிற் போக நாங்கள் விடப்போவதில்லை; எப்பொழுது குமாரசுவாமிக்கும் சுந்தரேசுவரிக்கும் கல்யாணம் நடக்கும், அது நிறைவேறியவுடன் எங்கள் மகனுக்குபுவனத்தைக் கல்யாணஞ் செய்து வைக்க வேண்டுமென்று எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார் என்னுடைய அவர்; அப்படியெல்லாமிருக்க உங்கள் மகன் ஏன் யோசிப்பான் நீங்கள் ஏன் கவலைப்படுவான்! நான் இந்த இரகசியத்தை உங்கள் மகனுக்குச் சொல்லிவிட்டால் அவர் சம்மதிப்பார் சந்தோஷப்படுவார்" என்று அன்புடன் சொன்னாள். கேட்ட சின்னம்மாளும் சந்தோஷப்பட்டாள். பின்னரும் சில மணிநேரம் அவர்கள் அங்கேபேசிக் கொண்டிருந்து விட்டு, சண்பகத்தாய் புறப்படும்போது குமாரசுவாமியையும் தங்கள் இரதத்தில் உடன் அழைத்துக் கொண்டு போனாள். தம் வீட்டைச் சேர்ந்த பின் குமாரசுவாமிக்கு, காஞ்சனமாலை ஏதோ சிற்றுண்டி வழங்கிக் கொண்டிருக்குஞ் சமயம் பார்த்து, சண்பகத்தாய் அங்கே வந்து "தம்பி, உங்கள் இளைய சகோதரியின் கருமங்களெல்லாம், முதற் கடவுள் இரண்டாவது நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம், நீர் அவைகளைப்பற்றி யோசிக்க வேண்டாம்; சுந்தரேசுவரி எங்கள் பிள்ளைகளைக் காட்டிலும் அருமையான குணமுள்ள பிள்ளை; அந்தப் பிள்ளையில் எங்களுக்கு அதிக விருப்பம்; அவர்கள் உமக்குக் கல்யாணம் பேசி வந்தார்களாம், உங்கள் தாயார் தெரிவித்தார், அது எங்களுக்கும் சந்தோஷம்; நீர் அதற்கு உடன்படத்தான் வேணும்; தவணையிடாமல் அதை நிறைவேற்றத்தான் வேணும்; நாங்களெல்லோரும் பார்த்துச் சந்தோஷப்படத்தான் வேணும்" என்று சொன்னாள். குமாரசுவாமி கூச்சமுடையவனாய் யாதும் பதிலின்றித் தலை குனிந்தபடி நின்றான். "ஏன், தம்பி, பேசாமல் நிற்கின்றீர்" என்று சண்பகத்தாய் மீட்டும் கேட்க, அயலேநின்ற காஞ்சனம் புன்னகைசெய்து "சம்மதமானபடியாற்றானே, அம்மா, அண்ணா மௌனஞ் சாதிக்கின்றார்; மீட்டும் ஏன் கேட்பான்' என்றாள். கூசிநின்ற குமாரசுவாமியும் அவள் சொன்னதைக் கேட்டவுடன் சிரித்து "நீங்களும் தங்கைச்சியும் சொன்னபடி செய்யத்தானே வேணும்" என்று பதில் சொல்லிவிட்டுப் போக முயல, காஞ்சனம் தங்கள் இரதத்திலேயே ஏற்றி அவனை வீட்டிற்கு அனுப்பினாள்.

—வரும்.

# அநுராதபுர நகர நிர்மாணத் திட்டம்

## சித்திரங்களடங்கிய பிரசுரம் வெளியிட ஆலோசனை

புதிய அநுராதபுரத்தை நிர்மாணிப்பதற்கும் பழைய நகரைப் பாதுகாப்பதற்குமான திட்டங்களை விபரித்துச் சித்திரங்களடங்கிய பிரசுரமொன்றை வெளியிட்டு அத்திட்டத்தை ஜனங்களறிந்து கொள்ளும்படி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த திட்டம் கூடிய விரைவில நடைமுறைக்குக் கொண்டு வரப்படவிருக்கிறது. புதிய நகரை நிர்மாணிப்பதற்கு வேண்டிய நிலம் இப்பொழுது அளந்து கணக்கெடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. நிலம் அளந்து கணக்கெடுக்கப்பட்டு முடிந்த உடனே விலைக்கு வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சித்திரங்களடங்கிய பிரசுரம் வெளியிடப்படுவதுபற்றிக் குறித்த திட்டம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற கமிட்டியிடமும் நகர நிர்மாண ஆலோசனை அதிகாரியிடமும் ஸ்தல ஸ்தாபன மந்திரி சிலாகித்துக் கூறியிருக்கிறார்.

அத்தகைய நடவடிக்கைபாற் பொதுஜன ஒத்துழைப்புக் கிடைக்குமென்றும் அது குறித்த திட்டத்தை நடத்துவதற்கு மிகவும் உதவியாக விருக்குமென்றும் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

புதிய நகரின் மாதிரிப் படத்திற் செய்யப்பட்ட திருத்தங்களும் பழைய நகரைப் பாதுகாப்பதற்கான திட்டமும் ஏற்கெனவே அரசாங்கசபை அங்கத்தவர்களுக்கு விபரித்துக் கூறப்பட்டிருக்கிறது. அப்பொழுது சம்பந்தப்பட்ட படங்கள் அவர்களுக்குக் காட்டப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரல் சிறைச்சாலையில் ருஷ்யரின் பிரேதங்கள்

லண்டன் ஆக 16

ஓரல் மத்திய சிறைச்சாலையைச் சேர்ந்த விளையாட்டு மைதானத்தில் ருஷ்ய யுத்தக்கைதிகளும் ஸ்திரீகள் உட்படப் பொதுஜனங்களும் பெருந்தொகையாக அடக்கம் செய்யப்பட்டிருப்பதாக மொஸ்கோவிலுள்ள ராய்டரின் விசேஷ நிருபர் எழுதுகிறார். அவர் மேலும் எழுதுவதாவது:-

இதுவிஷயம்பற்றி விசாரணை நடத்திவரும் புரொபஸர் வரோபீவ் என்னிடம் கூறியதாவது:-

இதுவரை நாம் 200 பிரேதங்களைத் தோண்டி எடுத்திருக்கிறோம். நமது வேலை முடிவடைவதற்கு 5000 பிரேதங்கள் தோண்டியெடுக்கப்படவேண்டுமென்று தெரிகிறது. சில அகழிகளிற் பிரேதங்கள் ஒழுங்கான முறையில் அடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் சிலவற்றில் அவை கண்டபடி போடப்பட்டிருக்கின்றன. அநேக பிரேதங்கள் ஆண்களுடையவை. ஆனால் பெண்களின் பிரேதங்களும் இருக்கின்றன. உக்ரேன் நாடகக்கொட்டகையைச்சேர்ந்த பாடகியான பெலோவாவின் பிரேதம் ஒருசெங்கற் தொழிற்சாலையிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டது. அப்பெண்மணியின் பிரேதத்துடன் அவளுடைய சில பொருட்களும் இருந்தன, அவள் தலையில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தாள்,

## நாவலப் பிட்டியில் தீவிபத்து

நாவலப்பிட்டி நகரின் மத்தியிலுள்ள ஹோட்டல் ஒன்றும், மற்றோர் ரொட்டிக்கடையும் தீப்பற்றி எரிந்தன. சம்பந்தப்பட்ட கட்டிடங்களிற் சில பாகங்கள் நாசமடைந்தன. தீப்பற்றியவிதம் தெரியவில்லை.

## வெங்காயம் விற்க மறுத்ததாக வழக்கு

யாழ்ப்பாணம் ஆக 16—

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் நீதிபதி திரு. மாணிக்கவாசகர் முன்பாகச் சின்னக்கடையில் கடை வைத்திருக்கும் மீராசாகிப்-நயினுமுகம்மது என்பவர்மீது சென்ற ஆடிமாதம் 18ந் திகதியளவில் வெங்காயத்தை வைத்துக்கொண்டு விற்பனைசெய்ய மறுத்ததாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது விலைக்கட்டுப்பாடு இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஸி. யேசுதாசன் சாட்சியங் கூறினர்.

அதன்மேல் பொலிஸ்கொன்ஸ்டபிள் எதிரி கந்தையா முதலியோர் சாட்சியங் கூறினர்.

நீதிபதி குறித்த தீர்ப்பைத தவணையிட்டார்.

## பசுவைக் கொன்றவருக்கு ரூபா 20 அபராதம்

அளுத்கமையைச் சேர்ந்த அப்துல் ரஹிம் என்னும் ரசாக் பாதுகாப்புச் சட்டத்தின் 628ம் பிரிவை மீறி ஓர் பசுவைக் கொன்றார். சம்பந்தப்பட்டவழக்கு களுத்துறைப் பொலிஸ் கோட்டில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப் பட்டபோது எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூபா 20 அபராதம் விதித்தார்.

## வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலை வருடாந்தக் கூட்டம்

இவ்வித்தியாசாலையின் வருடாந்தக்கூட்டம் வருகிற சனிக்கிழமை (21-8-43) இரவு ஏழுமணியளவில் ஷை வித்தியாசாலைத் திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் வித்தியாசாலையின் அறிக்கை, வரவு செலவு முதலியன வெளியிடப்படும். அன்றியும் பல அறிஞர்கள் அரிய விஷயங்களில் உபந்நியாசஞ் செய்வார்கள்.

—கடித.

## ஒதுங்கிக்கொள்ள ஜனங்களைப் பழக்குதல்

ஜனங்கள் பொதுஜனப் பாதுகாப்புக் கூட்டங்களிலும் அகழிகளிலும் ஒதுங்கப் பழகிக்கொள்ளும்பொருட்டு பொதுஜனப் பாதுகாப்பு அதிகாரிகள் நகரின் சகல பிரிவுகளிலும் விமானத் தாக்குதற் பாதுகாப்புப் பயிற்சிகளை நடத்தி வருகின்றனர்.

இப்பயிற்சிகள் 14 தினங்கள் வரை தொடர்ந்து நடைபெறும். அதன்பின், இவற்றின் மூலம் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கப்படும். பொலீஸாரும் வார்டன்களும் இவற்றை ஒழுங்கு செய்துவருகின்றனர்.

## காந்திஜீ தினக் கொண்டாட்டம்

### கைதிகளான 300 பேர் விடுதலை

பம்பாய் ஆக 11—

மகாத்மாகாந்தி கைதியான தினம் ஆகஸ்ட் 9 கொண்டாட்டம் சம்பந்தமாகப் பாதுகாப்புச் சட்டப் பிரகாரம் கைது செய்யப்பட்ட 300 பேர் இன்றிரவு விடுதலை செய்யப்பட்டனர்.

காங்கிரஸ் கொடிகளைத் தாங்கிக் கொண்டு கோஷமிட்டுச் சென்றதற்காக 9-ந் தேதி கைதியான 16 பேருக்கு இன்று தனித்தனி 5 மாதக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஊர்வலத்திற் கலந்துகொண்டதற்காகக் கைதுசெய்யப்பட்ட இன்னும் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

காங்கிரஸ் கொடியை நாட்டுவதற்காக அரசாங்கக் காரியாலயக் கட்டிடத்துக்குள் நுழைந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த திரு. என். பி. பருலேக்கருக்கு ஒரு வருஷக் கடினகாவல தண்டனை விதிக்கப்பட்டது.

தாதரில் ஜூலை 25ந் தேதி ஊர்வலம் நடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டிருந்த மூவருக்குத் தனித்தனி 5 மாதக் கடினகாவல்.

பம்பாய் முனிஸிபல் கோர்ப்பொரேஷன் அங்கத்தவரும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவருமான ஸ்ரீ ஐ. எஸ். படேல் தேக அசௌக்கியம் காரணமாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இவர்போன ஆகஸ்ட 9ந் தேதி கைது செய்யப்பட்டவர்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வெள்ளி ஆகஸ்ட் 20

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8இரு தூலிசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எம் மாணிக்க பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எம் மாணிக்க பாகவதர் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எம் கே கமலாம்பாள்பாட்டு 5-40 துரான்-ஷரீப் 6 எஸ் பக்கிரிசாமி பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7–45 ராழவும் சோழவும் 8 எஸ் பக்கிரிசாமி பிள்ளை நாகஸ்வரம் 8-45 எம் கே கமலாம்பாள் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் ஆங்கிலம் 10-00 கதம்பம் † 10-30 முடிவு.

### சனி ஆகஸ்ட் 21

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் என் கணேசபிள்ளை வயலின் 9 முடிவு.

1 பி எஸ் சிவபாக்கியம் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பாபநாசம் சிவன் பாடல்கள் † 2 தமிழில்செய்திகள் 2–05 என் என் கணேசபிள்ளை வயலின் 2-30 முடிவு.

மாலை 5 பி எஸ் சிவபாக்கியம் பாட்டு 5-40 அழகர் அந்தாதி 6 திரைகானம் † 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 640 கிராமநிகழ்ச்சிகள் 7-15 குடிசைப்போரணி 2 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 மதராஸிலுள்ளபடி முசிரி சுப்ரமணியஐயர் பாட்டு 9–15 லலிதா வெங்கடராம் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 இரு கோட்டு வாத்யங்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு ஆகஸ்ட் 22

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 எம் ஜி நாகோஜிராவ் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 வி எஸ் கோமதி சங்கரய்யர் வீணை 9 முடிவு.

12 வள்ளி கலியாணம் † 12-30 ஒலிமலர் 5 இதழ் 15 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தங்கக்குட்டி ரவிவர்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 தங்கக்குட்டி ரவிவர்மாபாட்டு 5.40 தேவாராதனை 6 வி எஸ் கோமதி சங்கரய்யர் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இவையின்றி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எங்கள் தபால்பெட்டி 8 ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் 6 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 மூன்று வயலின்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் ஆகஸ்ட் 23

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சிவாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருக்குவளை முத்துக்குமாரஸ்வாமிபிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ராஜலக்ஷமி கிருஷ்ணன் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருக்குவளை முத்துக்குமாரஸ்வாமி பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 ராஜலக்ஷமி கிருஷ்ணன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 தாயின் ஹிருதயம் 7-55 திரைகானம்† 8 பாலக்காடு ராம பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வியோலா, தாக் 10 கதம்பம் † 10-30 முடிவு.




சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற

சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(Q. 30. 11-5.43—10-8.43)

குறைந்த விலையில் துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 19, August, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org